சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No.50/2019

ம.சா.2
நாள். 14.12.2023.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சிவதாஸ் | மதம்: | இந்து |
| தகப்பனார் /கணவர் பெயர்: | வாசு | ஜாதி: | --- |
| கிராமம்: | --- | வேலை: | --- |
| வட்டம்: | திருச்செங்கோடு | வயது: | --- |

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 3 ம் தரப்பினர். நான் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்திற்கு முன்பு விபத்தில் இறந்து போன ரோகித் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனக்கு உறவினர். விபத்தின் போது அவர் சென்னையில் பணிபுரிந்து வந்தார். ரோகித்தின் அப்பா கேரளாவில் வசிக்கிறார். அவர் என் சகளையின் உறவினர் என்பதால் எனக்கும் உறவினர். லாரி எனக்கு முன்னால் 200 மீட்டர் தூரத்தில் சென்றது. நான் சத்தம் கேட்ட பின்பு தான் விபத்தை நான் பார்த்தேன். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அதனால் விபத்து யாருடைய கவனகுறைவு காரணம் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல. எனக்கு விபத்து நடந்த விதம் பற்றி நேரடையாக தெரியாமல் மனுதாரர் உறவினர் என்பதால் அவர் சொல்லி கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. லாரியின் பின்புறத்தில் தான் இருசக்கர வாகனம் மோதியது என்றால் சரிதான். இறந்து போன ரோகித்துக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அவர் தலைகவசம் அணியாததால் தான் தலைகாயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் போலீஸ் புகார் கொடுக்கவில்லை.

Sd/-சிவதாஸ்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.